# நடனம்

## பாடத்திட்டம்

# தரம் 10

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீ லங்கா
www.nie.lk

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 01 |
| 2.0 | தேசிய இலக்குகள் | 02 |
| 3.0 | அடிப்படைத் தேர்ச்சிகள் | 03 - 04 |
| 4.0 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | 05 |
| 5.0 | பாடத்திட்டம் | 6 - 11 |

## 1.0 அறிமுகம்

கலைத்திட்டமானது 2007ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாகத் தேர்ச்சியை மையமாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விருத்தியாக்கப்பட்டுள்ளது. தரம் 10 இற்கான விருத்தியாக்கப்பட்ட பாடத்திட்டமானது 2015ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளது.

வகுப்பறைக் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டினை அவதானித்ததன் மூலமும், சீர்திருத்த அறிக்கையிலிருந்து வெளிக்கொணர்ந்த கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டும் நடன பாடத்தின் கோட்பாடு மற்றும் உள்ளடக்கம் சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- சூழல் சார்ந்த செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பை மேம்படுத்தல்.
- தாளம் மற்றும் குறியீட்டுமுறை என்பவற்றில் தேர்ச்சியடையும் ஆற்றலை விருத்தியாக்கல்.
- பாவம் மற்றும் கதாபாத்திரங்களை முன்வைக்கும் திறனை வளர்த்தல்.
- செயற்பாடுகளினூடாகக் கீழைத்தேய நடனம், பாடல் மற்றும் இசைக்கருவியாக்கம் போன்றவற்றை நிர்மாணிக்கத் தூண்டுதல்.
- உள்ளகப் பல்கலாசார, இனங்களுக்கிடையிலான சமாதான சகவாழ்வை வளர்த்தல் மற்றும் பேணல்

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவை உதவும் என்பது போல சிந்திக்கும் ஆற்றல், சமூக ஆற்றல், தனிநபர் ஆற்றல்களை வளர்க்கவும், கலைப்படைப்புக்களை விமர்சிக்கவும், நயக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய கலாசார சொத்துக்களை அழிய விடாது பேணிப் பாதுகாப்பதற்கான பின்னணியை உருவாக்கத் தேவையான சக்தியை விருத்தி செய்வதன் மீதும் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கல்வியின் நவீன கோட்பாடானது செயற்பாட்டு மைய, மாணவர் மையக் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் உறுதியான இணைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடைவதற்குரிய திறன், நடனம் சார்ந்த தேர்ச்சி மைய நவீன அணுகுமுறைகள் மூலம் வழங்குகின்றது.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

தேசிய கல்வி ஆணைக்குழு

முதலாவது அறிக்கை (2003 திசெம்பர்)

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகளை மேற்காட்டிய தேசிய நோக்கத்தினை அடைந்து கொள்வதற்குப் பங்களிப்புச் செய்யும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை போன்ற நான்கு தொகுதிகளினடிப்படையில் தொடர்பாடல் தேர்ச்சிகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**எழுத்தறிவு** : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

**எண்ணறிவு** : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்குமுறை யாக அளத்தல்.

**சித்திர அறிவு** : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் என்பனவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

**தகவல் தொழில்நுட்பத் தகைமை:** கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மனஎழுச்சிகள், நுண்ணறிவு

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சமூகம், உயிரியல், பௌதிகம் போன்ற சூழல்களுடன் தொடர்புறுகின்றன.

**சமூகச் சூழல்:**

தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும் பகிர்ந் தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

**உயிரியல் சூழல்:**
வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி, மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வில் தொடர்புறும் தெளிவு இயல்பாக்கமடைதல் எனும் திறன்.

**பௌதிகச் சூழல்:**
இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும்.
கற்றலுக்கும், வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும், சவால்களை இனம் காணல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தலும், பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல் போன்ற இயலுமைகளை உச்சப்படுத்திக் கொள்வதற்கும் இயலளவை அதிகரித்துக் கொள்வதற்குமான வேலை பொருளுணர்வுடன் தொடர்புடைய திறன்கள்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வுநேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**
விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும், வெற்றியையும் பெறச் செய்தல்.

## 4.0 நடன பாடத்தின் நோக்கங்கள்

- இயற்கை மற்றும் செயற்கையான வெளிப்படைச் சூழலின் கலைப்படைப்பின் பெறுமதிகளை இனங்காணவும், அதன் முக்கியத்துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளவும் அதனைப் பாதுகாக்கவும் கூடிய மனப்பாங்கினை கண்ணியத்துடன் விருத்தி செய்தல்.

- சமூக மற்றும் தனிநபர் திறனை விருத்தி செய்வதன் மூலம் உயர் வாழ்க்கைத் தரத்தை உருவாக்கி அதன் மூலம் தனிநபர் உலகத்தை எதிர் கொள்ளக் கூடிய திறனை நடன பாடம் சார்ந்த செயற்பாடுகளின் மூலம் விருத்திசெய்தல்.

- அன்றாட வாழ்வில் ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சனை நிலைமைகளை ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல் மற்றும் நடன பாடம் தொடர்புடைய ஆக்கபூர்வமான படைப்புக்களை உருவாக்கத் தேவையான ஆக்கத்திறன் மற்றும் ஆக்கச் சிந்தனையை விருத்தி செய்தல்.

- நடன பாடம் தொடர்பான கலாசாரப் பின்னணியினூடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு, தேசிய கலாசாரப் பெறுமதிகள் மற்றும் ஏனைய கலாசாரங்களின் உள்ளகப் பிரிவுகளை இனங்காணவும்,மதிக்கவும், பாதுகாக்கவும் கூடிய சரியான மனப்பாங்கை விருத்தி செய்தல்.

- பல்வேறுபட்ட தொடர்புசாதன ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளைத் திறனாய்வு செய்யவும் மற்றும் அவற்றின் மதிப்பைச் சரியாக உணர்ந்து கொள்ளவும் கூடிய திறனை வளர்த்தல்.

- வெற்றிகரமான வாழ்க்கை முறைத் தேவைக்காக உடல் மற்றும் உளம் சார்ந்த ஆரோக்கிய நிலைகளை விருத்தி செய்தல்.

## 5.0 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 சூழலை அவதானிப் பதன் மூலம் பெற் றுக் கொண்ட அனு பவங்களை அடிப் படையாகக் கொண்டு நடனத்தை உருவாக்குவார். | 1.1 பிரதேசத்தில் உள்ள தொழில் களை அடிப்படையாகக் கொண்டு நடனங்களை நிர்மாணிப்பார். | • மீனவர் / களிமண் / சுரங்கம் / தேயிலை / தும்பு / விவசாயம் போன்ற தொழில்களில் காணக் கூடிய அசைவுகளை வைத்து நடனத்தை நிர்மாணித்தல் (ஒரு தொழிலை மட்டும் அடிப் படையாகக் கொண்டு) | • பிரதேசத்தில் உள்ள தொழில்களின் விசேட பண்புகளை இனங்கண்டு நடன நிர்மாணிப்புகளை முன்வைப்பார். | 05 |
| | 1.2 கிராமிய நடனங்களுடன் தொடர் புடைய விசேட பண்புகளை இனங்கண்டு நடனத்தை உருவாக்குவார். | • றபான்/ சாமர நடனத்துடன் தொடர்புபட்ட பண்புகளை இனங் கண்டு நடனத்தை நிர்மாணித்தல் | • றபான்/ சாமர நடன அமைப்புகளின் விசேட பண்புகளை இனங்கண்டு குழுவாக இணைந்து நடன நிர்மாணிப்புகளைச் செய்வார். | 05 |
| | 1.3 பாவங்கள் (நவரசம்) வெளிப்படும் படும் விதத்தில் கதாபாத்திரங் களை நிர்மாணிப்பார். | • பாவங்கள் வெளிப்படுத்துதல். (ஆச்சரியம் தரும் நிகழ்வொன்றை ஆதாரமாகக் கொண்டு) | • ‘ஆச்சரியம்’ என்னும் பாவத்தின் விசேட பண்புகளை ஆராய்ந்து அறிந்து அதற்காக நிகழ் வொன்றை உருவாக்கி நடன அமைப்பை வெளிப் படுத்துவார். | 03 |
| 2.0 நடனத்தின் அடிப் படைக் கொள்கை களைப் பின்பற்றிச் செயன்முறை நுட்பங் களை வெளிக்காட்டு வார். | 2.1 அடிப்படை நடனத்தின் கரங்கள், பாதங்கள் கையாளும் பலமுறை களைக் கொண்டு ஆரம்பப் பயிற்சி (‘மூலிக்க சரம்ப’) யை முன்வைப்பார். | • கொட சரம்ப / இலங்கம் சரம்ப/ மண்டிபத 1-12 வரை கஸ்திரம்/ இரட்டி/ கலாசம அடங் கலாக<br>• விளம்ப லய, மத்திம லய, துரித லயம் | • பாரம்பரிய நடனத்தின் அடிப்படை சரம்பப்பயிற்சி களை மூன்று லயத்திலும் முன்வைத்து அதை முடிவு செய்யும் பதங்களை ஆடிக் காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.2 பாரம்பரிய அசைவுகளைப் பயன் படுத்தி அழகிய பாதச் சுவடுகளை நிர்மாணிப்பார். | • சுளு, மகா தெத்தித்த தாள லயத் துக்கு ஏற்ப (மேளம் இசைத்தல் / தவில் இசைத்தல்) அழகான சுவடுகள் 2 | • மேளம் இசைப்பதற்கு ஏற்ப அலங்காரச் பாதச் சுவடுகள் இரண்டை நிர்மாணிப்பார். | 03 |
| | 2.3 சரியான அசைவுகளைக் கொண்டு பாரம்பரிய நடனப் பகுதிகளைக் காட்சிப்படுத்துவார். | • மலைநாட்டு- சிங்கராஜ வண்ணம, சவுலா வண்ணம முழுமையாக<br>• தாழ்நில- அனுராக தண்ட தாளம், நாதிலிஞ்சி தாளம் இரட்டியவுடன்<br>• சப்பிரகமுவ - விராடி, மண்டுக வண்ணம முழுமையாக<br>• தொன்ஜிந்த கததொந்த வட்டம ஆரம்ப பதத்துடன் மாத்திரா 2<br>• குந்த கத்தி கத வட்டம இரு மாத்திரா<br>• கமன் மாத்திராவின் வட்டத்தின் இரு மாத்திரைகள் (கஸ்திரம, அடவ்வ / அந்தாடிய, இரட்டிய / கலாசம, அடவு அடங்கலாக | • சரியான அசைவில் பாடலுடனும், பாடலின்றியும் பாரம்பரிய நடன அங்கங்களை (பகுதிகளை) முன்வைப்பார். | 04<br>03 |
| | 2.4 குறியீட்டு முறையின் பல வடிவங் களைக் கடைப்பிடிப்பார். | • துன்தித்த வின் வகைகளை இனங்காணல்<br>• வண்ணம், வட்டம், றபான், சாமர கவி, குறியீட்டு முறைகள் | • துன்தித்தவின் வகை களை இனங்கண்டு, விதி முறைகளுக்கிணங்க பாடலுடனும், பாடலின்றியும் நடன அங்கங்களின் பாடல் வரிகளையும் (பெறபத) மேளப்பதங் களையும் குறியீட்டில் காட்டுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.5 நடனக்கலையுடன் தொடர்புடைய வெளிப்படுத்தும் முறைகளைக் கற்றுக் கருத்துகளை வெளிப் படுத்துவார். | • 4 வகை அபிநயங்கள் (ஆங்கிக்க, வாச்சிக, சாத்தவிக, ஆ ஹ ா ர் ய அபிநயம்) | • நடனத்துடன் தொடர் புடைய நால் வகை அபி நயங்களுக்குரிய அங்கங் களின் விசேட பண்பு களைக் ஆராய்ந்தறிந்து கருத்துக்களை முன் வைப்பார். | 02 |
| 3.0 பாரம்பரிய இசைக் கருவிகளையும் அதற் கொத்த மாற்றீட்டு இசைக் கருவிகளை யும் இனங்கண்டு அவற்றை இசைக்கும் திறனைக் காட்டுவார். | 3.1 சரியான நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மேளத்தை இசைத்துக் காட்டுவார். | • 1-2 பெற சரம்ப / தவுல்பத சுளு, மெதும் தெத்திதே தாளத்துக்கு மேளம் இசைத்தல் | • மேளவாத்தியத்துடன் தொடர்புடைய நுட்ப முறைகளை இனங்கண்டு 'தெத்தித்த' தாளத்துக்கு மேளம்/தவில் இசைத்தல் காட்டுவார். | 03 |
| | 3.2 தகவல்களைப் பரிமாற இசைக் கருவிகளை இசைத்த சந்தர்ப்பங் களை விபரிப்பார். | • அணபெற<br>றணபெற<br>மலபெற<br>வதபெற<br>• ஹேவிசி இசைத்தல் | • தொடர்பாடலுக்காக வாத்தியக் கருவிகளை பயன்படுத்திய விதத் தினைக் கலந்துரையாடி, அவற்றின் விசேட பண்பு களை ஆராய்ந்தறிந்து தகவல்களை முன்வைப்பார். | 02 |
| 4.0 தேசிய கலாசாரத் துடன் பின்னிப் பிணைந்த பாடல் களின் பின்னணியை அவதானித்து தனது பாடல் திறமையை வெளிப்படுத்துவார். | 4.1 பாடலுடன் தொடர்புடைய கலாசார பின்னணியை விபரிப்பார். | • சாமர, றபான், ஊஞ்சல் பாட்டு, டீகா சீபத, வண்ணம், நமஸ்கார காத்தா இவற்றுடன் தொடர் புடைய கலாசாரப் பின்னணி | • தேசிய நாட்டார் பாடல் களின் விசேட பண்பு களை ஆராய்ந்தறிந்து அவற்றின் சமூக, கலா சாரப் பண்புகளின் முக்கியத்துவத்தை விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 4.2 சரியான நாதத்துடன் நாட்டார் பாடல்களைப் பாடுவார். | ◆ பாடுதல்<br>சாமர, றபான், ஊஞ்சல் பாட்டு, டீகா சீபத, நமஸ்கார காத்தா, வண்ணம் | ◆ தாளத்துடனும் தாளமின்றியும் பாடப்படும் பாடல் களைச் சரியான இசை யுடன் பாடிக்காட்டுவார். | 06 |
| 5.0 தேசிய நடன சம்பிர தாயத்துடன் தொடர்பு பட்ட வரலாற்று கலா சார பின்னணியை ஆராய்ந்து கற்று, அவற்றை தேசிய சொத்தாகப் பேணு வதில் அக்கறை செலுத்துவார். | 5.1 நடனக் கலையுடன் இணைந்த வரலாற்றுப் பின்னணியை விளக்கு வார். | ◆ வெளிநாட்டவரின் வரலாற்று அறிக்கைகள்<br>◆ மகாவம்சத்தின் ஆதாரங்கள் | ◆ தேசிய நடனக் கலை யுடன் தொடர்புடைய வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 02 |
| | 5.2 இலங்கையின் நடனக் கலையை வளர்க்க உழைத்த கலைஞர் களை மதிப்பிட்டுத் தகவல்களை முன்வைப்பார். | ◆ நடனத்துக்குப் பெண்கள் ஆற்றிய பங்கு<br>- சந்திரலேக்கா பெரேரா<br>- வஜிரா சித்திரசேன<br>- மிரண்டா ஹேமலதா | ◆ தேசிய நடனக் கலையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கிய மகளிரைப் பாராட்டி அவர்கள் பற்றிய தகவல்களை முன்வைப்பார். | 02 |
| | 5.3 தேசிய கிராமிய நாடகங்களுடன் இணைந்த பின்னணியை ஆராய்ந்து கற்று, அதன் விசேட பண்புகளை முன்வைப்பார். | ◆ சொக்கறி நாடகம்<br>கதை, பழக்க வழக்கங்கள், பாடல், இசை, நடனம், ஆடை அணிகலன்கள் | ◆ தேசிய, கிராமிய நாடகங் களின் கதை வடிவம், ஒழுங்கு முறைகள், பாடல், இசை, நடனம், நடிப்பின் போது அணியும் ஆடை அணிகலன்களின் கலைப் பின்னணியை விளக்கிக் கூறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 5.4 தேசிய நடன பாரம்பரியத்துடன் இணைந்த சாந்திக் கிரியைகளின் கலாசார பண்புகளை ஒப்பிட்டுக் காட்டுவார். | ◆ கொஹொம்ப கங்காரிய, சன்னிய கும, பஹன்மடுவ, சாந்திக்கிரியை களின் கதை விளக்கம், நடனம், பாடல், இசை, நடிப்பு, ஆடைஅணி கலன்கள், சோடனை அலங்காரங் கள், இசைக்கருவி களின் விசேட பண்புகள் | ◆ தேசிய சாந்திக்கிரியை களின் (சாந்தி கர்ம) கலைப் பண்புகள், கலா சார பண்புகள் என்பவற்றை ஒப்பிட்டு விளக்குவார். | 04 |
| 6.0 நடனக் கலை யின் கலைப் பெறுமதியை மதிப்பிட்டு அவற் றின் முக்கியத் துவத்தை விமர் சித்துக் கூறுவார். | 6.1 தேசிய நாட்டிய நாடக கலையின் பின்னணி பற்றிய தகவல்களை முன்வைப்பார். | ◆ தேசிய நாட்டிய நாடகக் கலை பற்றிய தகவல்கள்<br>- அறிமுகம்<br>- ஆரம்பம், பரவலடைந்த விதம் (1930 - 1960)<br>- ஒத்துழைத்த கலைஞர்கள் | ◆ தேசிய 'நாட்டிய' நாடகக் கலையுடன் தொடர்புடைய தகவல்களை முன்வைப்பார். | 04 |
| | 6.2 நாட்டிய நாடகம் ஒன்றைப் பார்வையிட்டு விமர்சிப்பார். | ◆ கூம்பி கத்தாவ (எறும்புக் கதை) நாட்டிய நாடகம்<br>கருப்பொருள்<br>கதாபாத்திரங்கள்<br>ஆடை, அணிகலன்கள்<br>நடனம், சங்கீதம்<br>பின்னணி<br>நிர்மாணிப்புக்கு உதவிய கலைஞர்கள் | ◆ முதற்தரமான 'நாட்டிய' நாடகமொன்றின் கலைப் பண்புகளை ஆராய்ந்து அதன் விசேட பண்பு களை விபரித்துக் கூறுவார். | 04 |
| | 6.3 வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்த நடன சம்பிரதாயங்களை ஆராய்ந்து, கற்றுத் தகவல்களைச் சேகரித்து முன்வைப்பார். | ◆ கதகளி நடனம் பொருள் விளக்கம்<br>◆ பிரபல்யமான பிரதேசங்கள் நடனம், சங்கீதம், இசைக் கருவிகள்,ஆடை அணிகலன்கள் பற்றிய விளக்கம் | ◆ கதகளி நடன சம்பிர தாயத்துடன் தொடர்பு பட்ட விடயங்களை ஆராய்ந்து அதன் விசேட பண்புகளை விபரித்துக் கூறுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 7.0 அவதானிப்பதன் மூலம் பெறப்பட்ட அனுபவத்தை அடிப் படையாகக் கொண்டு நடனக்கலைப் படைப் புகளை உருவாக்கு வார். | 7.1 நடனம் ஒன்றை நிர்மாணிப்பார். | ◆ மெம கிம்ஹான ....<br>◆ ஹனிக்க வரெவ் கொல்லனே... பாடல்களுக்குப் பொருத்தமான நடனம் | ◆ பாடல் ஒன்றின் பின்னணிக் குப் பொருந்தும் நடனங் களை நிர்மாணிப்பார். | 04 |
| | 7.2 கதாபாத்திரத்தின் சுபாவம் வெளிப் படும் விதத்தில் அங்க அசைவு களைக் காண்பிப்பார். | ◆ மிருகங்களின் நிலைகள், மனிதனின் மெய்நிலைகள் | ◆ விலங்கு, மனித சுபா வங்கள் வெளிப்படும் விதத்தில் சம்பவம் ஒன்றுக் கான நடனங்களை உருவாக்குவார். | 05 |
| | 7.3 தேசிய நடனப் பாரம்பரியத்துடன் இணைந்த ஆடை அணிகலன்களின் மாதிரிகளை நிர்மாணிப்பார். | ◆ ஆடைஅணிகலன்களின் மாதிரி களை நிர்மாணித்தல். | ◆ நடன மேடைக்குப் பொருந்தும் ஆடை, அணிகலன்களை நிர்மாணிக்கும் திறனைப் பெறுவார். | 03 |
| 8.0 நடனக் கலையின் மூலம் கிடைக்கும் உள, உடற்சுகத் தைச் செழிப்பான வாழ்க்கை வாழப் பயன்படுத்திக் கொள்வார். | 8.1 மன அமைதியைப் பேணுவதன் முக்கியத்துவத்துவத்தை விளக்குவார். | ◆ ஆளுமை வளர்ச்சி<br>- சரியான தீர்மானங்களை எடுத்தல்<br>- ஆக்கபூர்வமாகத் தொழிற்படல்<br>- ஓய்வு நேரத்தைப் பயனுள்ள விதத்தில் கழித்தல்<br>- உடலின் ஆரோக்கியம் | ◆ நடனக் கலை மூலம் கிடைக்கும் மன அமைதி யைப் பேணிக்கொள்வதன் முக்கியத்துவத்தைக் கற்றறிவார். | 02 |
| | 8.2 உளரீதியான சுகத்தைப் பேண நடனச் செயற்பாடுகள் உதவும் விதத்தை விளக்குவார். | ◆ நடனச் செயற்பாடுகள்<br>- நடனம், பாடல், இசைகளில் நாட்டம் கொள்ளல் | ◆ நடனத்தின் போது உடல் சுகத்தைப் பேணும் வகை யில் உற்சாகமாகச் செயற்படுவார். | 02<br>85 |